
பக்கங்கள்: 07
# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 04 சனிக்கிழமை 18.06.2022 கதிர் 116

## நுவரெலியாவில் மாணவன் மாயம்
### பெற்றோர் முறைப்பாடு



நுவரெலியா மாவட்டத்தில் 12 வயது பாடசாலை மாணவன் ஒருவர் காணாமல்போயுள்ளார்.

நானுஓயா


☞2

## பொருளாதார நெருக்கடிக்குப் பொறுப்பு;
# கோட்டா, மஹிந்த உட்பட 13 பேருக்கு எதிராக மனு
### உயர்நீதிமன்றத்தில் தாக்கல்; ரணிலின் பெயரும் உள்ளடக்கம்



இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் எனப் பட்டியலிட்டு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உட்பட 13 பேருக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்று உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

☞2



## களனி ஆற்றில் வீசப்பட்ட சிறுவன் சடலமாக மீட்பு!

சிலாபம், வென்னப்பு - வைக்கால் கடற்கரையில் கரையொதுங்கிய நிலையில் மீட்கப்பட்ட சடலம், கடந்த 15ஆம் திகதி கதிரான பாலத்தில் இருந்து தாயாரால் களனி ஆற்றில் வீசப்பட்ட ஐந்து வயது சிறுவனுடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

சிறுவனின் சடலம் அவரது பாட்டியால் அடையாளம் காணப்பட்டது எனப் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

☞2

### கால்வாயில் பாய்ந்து
## உயிர் துறக்க முயன்ற குடும்பப் பெண்ணை காப்பாற்றிய பொலிஸ்

கண்டி - ஹசலக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மினிப்பே கால்வாயில் குதித்து உயிரை மாய்த்துக்கொள்ள முயன்ற குடும்பப் பெண்ணொருவரைப் போக்குவரத்துக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் காப்பாற்றியுள்ளார்.

பொலிஸ் உத்தியோகத்தர் அப்பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரின் உதவியுடன் குறித்த பெண்ணை மீட்டு ஹசலக்க வைத்தியசாலையில் சேர்த்துள்ளார்.

குறித்த பெண் பரவர் தனமய பிரதேசத்தைச் சேர்ந்த 58 வயதுடையவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்துக்கான காரணம் தெரியவராத நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## கோட்டா - ரணிலுடன் இணைந்து நாம் ஆட்சி அமைக்கவேமாட்டோம்
### சஜித் திட்டவட்டம்



மக்களின் கஷ்ட நஷ்டங்களைப் புரிந்து கொள்ளாத இந்த ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் ஒன்றாக இணைந்து எம்மால் ஆட்சி அமைக்க முடியாது. அவர்கள் இருவரும் மக்களுடன் விளையாடிக் கொண்டே இருக்கின்றனர்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாட்டில் உணவு மற்றும்

☞2

## 2024 ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்க சம்பிக்க வியூகம்
### சகல தரப்புகளுடனும் பேச்சுக்கள் மும்முரம்



பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து வெளியேறியுள்ள கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க, பரந்துபட்ட அரசியல் கூட்டணியை அமைக்கும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளார்.

43 ஆம் படையணி எனும் இயக்கத்தைக்

☞2

## ராஜபக்ஷ குடும்பத்தினர் வீட்டுக்கு சென்றால்தான் நாட்டுக்கு விடிவு
### மலையகத் தொழிலாளர் முன்னணி தெரிவிப்பு



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட ராஜபக்ஷ குடும்பத்தினர் வெளியே சென்றால் மாத்திரமே நாட்டுக்கு விடிவு கிடைக்கும் என்று மலையகத் தொழிலாளர் முன்னணியின் நிதி செயலாளர் புஸ்பா விஸ்வநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

☞2

## ரயிலில் சிக்குண்டு இளைஞர் மரணம்!

ரயிலில் சிக்குண்டு இளைஞர் ஒருவர் பலியாகியுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மாத்தறை ரயில் நிலையத்தில் நேற்றிரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.


திக்வெல்ல - வெவுருகன்னல பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மாத்தறையில் இருந்து பெலியத்த நோக்கிப் பயணித்த சாகரிகா ரயிலில் ஏற முற்பட்டபோது தவறி விழுந்த குறித்த இளைஞர் ரயிலின் அடியில் சிக்கியுள்ளார்.

இதையடுத்து, மாத்தறை செஞ்சிலுவைச் சங்கத்தின் அதிகாரிகள் மற்றும் அருகில் இருந்தவர்கள் அவரை மீட்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர்.

☞2

## மோட்டார் சைக்கிள் மோதி பெண் சாவு!



மோட்டார் சைக்கிள் மோதி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மஸ்கெலியா - சாமிமலை வீதியில் மோட்டார்

☞2

## பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கல்விச் செயற்பாடு இடைநிறுத்தம்
### விடுதிகளிலிருந்து மாணவர்களை உடன் வெளியேறுமாறும் அறிவிப்பு




நாட்டில் நிலவும் நெருக்கடிகள் காரணமாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அனைத்துக் கல்வி நடவடிக்கைகள் மற்றும் பரீட்சைகள் இன்று முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று அப்பல்கலைக்கழகத்தின்

☞2

## கொழும்பில் 16 மணிநேர நீர் வெட்டு!



அத்தியாவசிய திருத்தப் பணிகள் காரணமாக கொழும்பின் சில பகுதிகளில் இன்று 16 மணிநேர நீர்

☞2

## கோட்டா-ரணிலுடன் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குடிபானங்கள் தயாரித்தல் மற்றும் விநியோகம் செய்தல் சார்ந்து தொடர்புடைய துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கை உணவு பதப்படுத்துபவர்கள் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது. இதன்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தலைவர்களால் உருவாக்கப்பட்ட ஓர் அவலத்தையே இன்று நாடு முகம் கொடுக்கநேரிட்டுள்ளது. விஞ்ஞானபூர்வமற்ற முடிவுகளால் ஏற்பட்ட விளைவுகளின் அவலத்தை இன்று முழு நாடும் அனுபவித்து வருகின்றது.

இல்லாமைகளையும் இயலாமைகளையும் பற்றியே ஜனாதிபதியும் பிரதமரும் நாட்டுக்குக் கூறுகின்றனர். அரசு இயலாமையை அறிவிப்பதையே செய்து கொண்டிருக்கின்றது.

இந்த அபாயம் குறித்து தொடர்ச்சியாக நான் உட்பட எதிர்க்கட்சி கூறிய எதனையும் அரசு செவிசாய்க்கவில்லை.

இந்த அரசு ஆட்சிக்கு வந்தவுடன் பணக்கார குபேரர்களுக்கு வரிச்சலுகை வழங்கியதன் விளைவுகளை நாடு எதிர்கொள்கின்றது.

நமது நாடு தரவரிசைகளில் பின்னடைவுகளைச் சந்திக்கும்போது இது ஒரு சர்வதேச சதி என்றே அரசு கூறியது.

இன்று மக்கள் வரிசைகளில் நின்று மரணிக்கும் நிலைக்கு நாடு வந்து விட்டது.

இல்லை, இயலாது மற்றும் பார்க்கலாம் எனச்சொல்லுவதற்கு அரசொன்று தேவையில்லை.

நிலையற்ற தீர்வுகளால் நாடு முன்னேறாது. மக்கள் ஆணையின் மூலம் கிடைக்கப்பெறும் தீர்வே ஒரே தீர்வு - என்றார்.

## நுவரெலியாவில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நானுஓயா டெஸ்போட் தோட்டத்தைச் சேர்ந்த மகேந்திரன் ஆசான் என்ற 12 வயது பாடசாலை மாணவனைக் காணவில்லை என்று நானுஓயா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை ஊடகங்களுக்கு நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுவெள்ளிக்கிழமைகாலையில் இருந்து மாணவன் காணாமல் போயுள்ளார் என்று அவரின் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் நானுஓயா பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மோட்டார்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சைக்கிள் மோதி பலத்த காயங்களுடன் கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி யசரத்ன பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

சாமிமலை வீதியில் புரவுன்சீக் தோட்டத்தின் ராணி தோட்டப் பிரிவைச் சேர்ந்த பெருமாள் ருக்மணி (வயது 58) என்பவர் வீட்டுக்கு சென்று கொண்டிருந்த வேளையில் மஸ்கெலியா நகருக்கு வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டார்.

குறித்த பெண்ணும் மோட்டார் சைக்கிள் ஓட்டுநரும் பலத்த காயங்களுடன் கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். எனினும், பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் - என்றார்.

## கொழும்பில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விநியோகத் தடை அமுல்படுத்தப் படவுள்ளது.

கொழும்பு 5 மற்றும் 6 ஆகிய பகுதிகளில் இந்த நீர் விநியோகத் தடை அமுல்படுத்தப்படவுள்ளது எனத் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, இன்று சனிக்கிழமை இரவு 11 மணி முதல் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணி வரை நீர் விநியோகத் தடை அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், குறித்த காலப்பகுதியில் கொழும்பு 4 பகுதியில் குறைந்த அழுத்த நீர் விநியோகம் இடம்பெறும் எனவும் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மேலும் குறிப்பிட்டுள்ளது.

## பேராதனைப்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
துணைவேந்தர் பேராசிரியர் எம்.டி.லமவன்ச ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், மாணவர் விடுதிகளையும் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக விடுதிகளில் தங்கியுள்ள அனைத்து மாணவர்களையும் விடுதிகளை விட்டு உடனடியாக வெளியேறி வீடுகளுக்குச் செல்லுமாறுபல்கலைநிர்வாகம்அறிவித்துள்ளது என்றும் துணைவேந்தர் மேலும் கூறியுள்ளார்.

## ரயிலில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சுமார் ஒரு மணித்தியாலமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையை அடுத்து இளைஞர் மீட்கப்பட்ட போதிலும் அவர் உயிரிழந்திருந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 2024 ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கட்டியெழுப்பி, ஆரம்பத்தில் புத்திஜீவிகளை உள்வாங்கிய சம்பிக்க ரணவக்க, தற்போது அரசியல் பிரமுகர்களையும் இணைத்துக்கொள்ளத் திட்டமிட்டுள்ளார்.

இதற்கான பேச்சுக்கள் தற்போது வெற்றிகரமாக இடம்பெற்று வருகின்றன என்று கட்சி பிரமுகர் ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

2024 இல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதித் தேர்தலை இலக்குவைத்தே, சம்பிக்க இவ்வாறான நகர்வில் இறங்கியுள்ளார் என அரசியல் களத்தில் கதை அடிபடுகின்றது.

## ராஜபக்ஷ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்ட அனைத்து விடயங்களும் தோல்வியிலேயே முடிந்துள்ளது. வரிசை யுகம் நீடித்துக்கொண்டே செல்கின்றதே தவிர குறைந்ததாகத் தெரியவில்லை.

இந்தப் பொருளாதார நெருக்கடியைச் சுமுகமான நிலைமைக்குக் கொண்டுவர முடியாத இந்த அரசு முதலில் வெளியேற வேண்டும். தொடர்ந்தும் இந்த அரசு இருந்து என்னதான் பயன்?

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட ராஜபக்ஷ குடும்பத்தினர் வெளியே சென்றால் மாத்திரமே வெளிநாடுகளில் உள்ளவர்கள் இலங்கைக்கு உதவி செய்ய முன்வருவார்கள். அப்போதுதான் நாட்டில் பஞ்சம் தீர வழி பிறக்கும்.

எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும், மலையகம் உள்ளிட்ட நாட்டு மக்களுக்கு அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து தருவதாகவே வாக்குறுதி வழங்கப்படுகின்றது. அதேநேரத்தில் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் இந்த வாக்குறுதிகளுக்கு அப்பால் மாற்றான்தாய் மனப்பான்மையுடன் பார்க்கப்படுகின்றார்கள் - என்றார்.

## களனி ஆற்றில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
களனி - கதிரான பாலத்தில் இருந்து கடந்த 15 ஆம் திகதி குறித்த சிறுவனைக் களனி ஆற்றில் வீசிய சந்தேகநபரான தாய், தானும் உயிரை மாய்த்துக்கொள்ள முயன்றபோது, பிரதேச வாசிகளால் காப்பாற்றப்பட்டார்.

இதையடுத்து அவர் வத்தளைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர் எதிர்வரும் 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், ஆற்றில் வீசப்பட்ட சிறுவனைக் கண்டுபிடிக்க தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில், வென்னப்புவ - வைக்கால் கடற்கரையில் இன்று காலை சிறுவன் சடலமாக மீட்கப்பட்டிருந்தான்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வத்தளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## கோட்டா, மஹிந்த......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
'டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் இலங்கை நிறுவனம்' மற்றும் மேலும் மூவர் இணைந்து இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், முன்னாள் திறைசேரி செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிக்கல, இந்நாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட 13 பேர் இந்த மனுவில் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இலங்கையில் நெருக்கடி ஏற்படும் வகையில் பகிரங்கத் தன்மை இன்றியும் பொறுப்புக்கூறலைத் தவிர்த்து உயர்மட்ட முடிவுகளை எடுத்ததற்கு எதிராகவும் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடிக்குக் காரணமான சில விடயங்களும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளன.

(1) 2019ஆம் ஆண்டு சட்டவிரோதமாக வரிச்சலுகை வழங்கியதன் மூலம் அரசு வருமானத்தைக் குறைத்தது.

(2) அந்த வரிச்சலுகையை மீண்டும் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காதது.

3) சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு பெறுவதைத் தாமதப்படுத்தியது.

(4) ரூபாவின் மதிப்பு தொடர்பாக உரிய நேரத்தில் தீர்மானம் எடுக்காதது.

மேற்படி விடயங்கள் குறித்து சம்பந்தப்பட்ட எதிர் மனுதாரர்கள் நேரடியாகப் பொறுப்புக்கூற வேண்டும் என மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர்.




நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மைத்திரியின் தப்புக்கணக்கு

ஜனாதிபதி கோட்டாபயவுக்கும் பிரதமர் ரணிலுக்கும் இடையில் போட்டி, பகைமை அதிகரித்து வருவதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கவலைப்பட்டு இருக்கிறார்.

இருவருக்கும் இடையில் ஒருங்கிணைப்பு, பரஸ்பர புரிந்துணர்வு, ஒற்றுமை இல்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது என்றும் குறிப்பிட்டுள்ளார் மைத்திரியார்.

அதனால், கோட்டா – ரணில் ஆட்சி முழுத் தோல்வியடைந்து, நாட்டின் 22 மில்லியன் மக்களையும் பெரும் படுகுழிக்குள் இழுத்துச் செல்கிறது என அவர் விசனம் தெரிவித்துள்ளார்.

அரசு அதிகாரிகளையும். தனியார் துறையினரையும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும் தனித்தனியாக அழைத்து, இருவரும் வெவ்வேறாகச் சந்தித்து, வித்தியாசமான வழிகாட்டுதல்களை வழங்கி, நிலைமையைக் குழப்புகின்றனர் என்றும் அவர் ஆதங்கப்பட்டுள்ளார்.

அவர் கூறுவது உண்மை என்றே வைத்துக் கொள்வோம். அதைத் தொடர்ந்து அவர் கூறிய இன்னொரு கருத்தையும் கவனிக்க வேண்டும்.

நல்லாட்சி அரசின் காலத்தில் தாம் ஜனாதிபதியாகவும், ரணில் பிரதமராகவும் இருந்த சமயத்தில் நிலவியமை போன்ற போட்டியே இதுவும் என்று அவர் கூறியிருக்கின்றார். அதையொட்டித்தான் இரண்டு விடயங்களைக் கவனிக்க வேண்டியுள்ளது.

அப்போதைய நிலைமைக்கும் இப்போதைய நிலைமைக்கும் முக்கியமாக இரண்டு வேறுபாடுகள் உள்ளன.

அப்போது ரணிலின் விட்டுக்கொடுப்பு, தியாகம், ஆதரவு, பிரசாரம் போன்றவற்றினால்தான் மைத்திரியே ஜனாதிபதியானார். ஜனாதிபதியான சமயத்தில், பதவிக்காலம் முழுவதும் அதற்காக நன்றியாக இருப்பேன் என்று கூறிவிட்டுப் பின்னர், ரணிலின் முதுகில் குத்தியவர் மைத்திரி. ஜனாதிபதி தேர்தலில் வென்ற பின்னர் அதனை வைத்து சு.க. தலைமையைக் கைப்பற்றியதும் கூட்டுச் செயற்பாட்டிலிருந்து குத்துக்கரணம் அடித்து, தனி வழி கட்சி அரசியல் செய்தவர் மைத்திரி. தன்னைப் பதவிக்கு கொண்டு வந்த ரணிலை செய்நன்றி கொன்று, அரசியலில் வீழ்த்துவதிலேயே முனைப்பாக நின்றவர் அவர்.

இப்போது நிலைமை அப்படியல்ல. தனி மரமாக நின்ற ரணிலுக்குப் பிரதமர் பதவி அளித்து, அழகு பார்த்திருக்கிறார் கோட்டாபய.

அப்போது தாம் ஜனாதிபதிப் பதவியில் இருந்து கொண்டு, பிரதமர் ரணிலைப் பதவியில் இருந்து துரத்தத் துடியாய்த் துடித்தவர் மைத்திரி. அதை சட்டவிரோதமான முறையில் முன்னெடுத்து, நீதித் துறையிடம் குட்டும் வாங்கினார். தமது பதவிக்காலம் முழுவதும் ரணிலைப் பதவியில் இருந்து அகற்றுவதற்கு தார்மீக வலிமையோ, சட்ட ஆதரவோ, பொது மக்களின் செல்வாக்கோ இல்லாமல், கடைசியில் பதவியில் இருந்து, தமது பதவிக் காலம் முடியும்போது வெஞ்சினத்துடன் வெளியேற வேண்டியவரானார் அவர்.

ஆனால், இப்போது அப்படியல்ல. முரண்பாடு இருந்தால் அடுத்த கனமே ரணிலை வீட்டுக்கு ஜனாதிபதி கோட்டாபய அனுப்ப முடியும். சட்ட ரீதியிலும், தார்மீக ரீதியிலும் அதற்கு அவருக்கு முழுமையான அதிகாரம், செல்வாக்கு முழு அளவில் உண்டு. ஆனால் அவர் அதைச் செய்யவில்லை.

ஜனாதிபதி – பிரதமர் முரண்பாடு நாட்டையும் மக்களையும் படுகுழியில் தள்ளுகிறது என்று இப்போது விசனப்படும் மைத்திரியார், தன்னுடைய ஆட்சிக் காலத்தின் கடைசி மூன்று வருடங்களும் அதைத்தான் – நாட்டையும் மக்களையும் படுகுழியில் தள்ளும் வேலையைத்தான் – தானும் செய்தார் என்பதை மறந்து இப்போது வேதம் ஓதுவது வியப்பைத் தருகின்றது.

தம்மை ஜனாதிபதி பதவிக்குக் கொண்டு வந்தவர் ரணில் என்பதையும், இன்று ரணிலைப் பிரதமர் பதவிக்கு கொண்டு வந்தவர் ஜனாதிபதி கோட்டா என்பதையும் மறந்து அதிகம் அரசியல் பேசுகிறார் மைத்திரியார்.

# எரிபொருளை பதுக்குபவர்களுக்கு எதிராக சட்டத்தைக் கடுமையாக அமுல்படுத்தவும்!

## ஜனாதிபதி அதிரடி உத்தரவு



நாட்டுக்கு தற்போது கிடைத்துள்ள மற்றும் அடுத்த சில நாள்களுக்குள் பெறப்படவுள்ள எரிபொருள் கையிருப்புக்களை நாடளாவிய ரீதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முறையாக விநியோகிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

பெற்றோல், டீசல் மற்றும் எரிவாயு விநியோகம் மற்றும் இறக்குமதி தொடர்பில் கொழும்பு, கோட்டை ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிதி அமைச்சும் மத்திய வங்கியும் அரச மற்றும் தனியார் வங்கிகளுடன் இணைந்து போதியளவு எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்கு வசதியாக கடன் கடிதங்களை வழங்குவதற்கான திட்டங்களை வகுக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

வழங்குநர்களுடனான நீண்டகால எரிபொருள் விநியோக ஒப்பந்தங்களில் ஈடுபடுவதற்கான சாத்தியம் தொடர்பாகச் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது.

எரிபொருள் விநியோகத்தில் பொதுப் போக்குவரத்துக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்களைப் பயன்படுத்தி, தனியார் மற்றும் சுற்றுலா பஸ்கள் மற்றும் பாடசாலை வாகனங்களுக்கு பொலிஸாரின் மேற்பார்வையின் கீழ் எரிபொருளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

ஏனைய அத்தியாவசிய சேவைகளுக்காக அடையாளம் காணப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களின் மூலம் தொடர்ந்தும் எரிபொருளை விநியோகிக்கவும், இராணுவம் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு பாதுகாப்பை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது.

தேவையில்லாமல் எரிபொருளை பதுக்கி வைப்பவர்களுக்கு எதிராக சட்டத்தைக் கடுமையாக அமுல்படுத்தவும் பாதுகாப்பு படையினருக்கு உத்தரவிடப்பட்டது.

தற்போதுள்ள எரிவாயு கையிருப்புக்களை முறையாக விநியோகிப்பதற்கும் போதுமான எரிவாயு கொள்ளளவை முன்கூட்டியே பெற்றுக்கொள்வதற்கு தேவையான ஏற்பாடுகளை செய்வது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி அநுர திஸாநாயக்க, நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் மாபா பத்திரன, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எஸ். ஹெட்டியாராச்சி, பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன ஆகியோருடன் பாதுகாப்பு, எரிபொருள், மின்சாரம் மற்றும் எரிவாயு தொடர்பான நிறுவனங்களின் தலைவர்களும் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

# தரிசு நிலங்களில் விவசாயத்தை மேற்கொள்ள இராணுவ பசுமை விவசாய வழிகாட்டல் குழு!

உணவுப் பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்டு இராணுவத்தால் பசுமை விவசாய வழிகாட்டல் குழுவொன்று நிறுவப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் நாடு முழுவதும் உள்ள தரிசு அல்லது கைவிடப்பட்ட அரச காணிகள் உள்ளடங்களான 1,500 ஏக்கர்களில் விவசாயம் மேற்கொண்டு இலங்கை உணவுப் பாதுகாப்பு நிகழ்ச்சி திட்டத்தை மேம்படுத்தும் முகமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கு இணங்க ஜூலை மாத தொடக்கத்தில் இந்த அவசர செயற்த்திட்டம் ஆரம்பிக்கப் படவுள்ளது.

இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும்லியனகே தலைமையில், பிரதிப் பதவி நிலை பிரதானி மேஜர் ஜெனரல் சன்னவீரசூரிய இந்தத் திட்டத்தின் முகாமைத்துவத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இராணுவ வழங்கள் தளபதி மேஜர் ஜெனரல் இந்துசமரகோன், தலைமை களப் பொறியியலாளர் மேஜர் ஜெனரல் மஹிந்த ஜயவர்தன, உபகரண மாஸ்டர் மேஜர் ஜெனரல் பிரசன்ன ரணவக்க, பொதுப்பணி பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் நிஷாந்த மானகே, நிதி முகாமைத்துவப் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் ஷிரான் அபேசேகர, வேளாண்மை மற்றும் கால்நடைகள் பணிப்பாளர், நடவடிக்கை பணிப்பக பணிப்பாளர், ஊடகப் பணிப்பாளர், மின் மற்றும் இயந்திர பொறியியலாளர்கள் பணிப்பாளர், ஆராய்ச்சி கருத்து கோட்பாட்டு பணிப்பாளர் மற்றும் சில சிரேஷ்ட அதிகாரிகள் இந்த குழுவில் உள்ளடங்குவர்.

இராணுவ பதவி நிலை பிரதானி மேஜர் ஜெனரல் ஜகத்கொடிதுவாக்கு திட்டத்தை மேற்பார்வையிட உள்ளார்.

இந்தக் குழுவின் ஆரம்ப அமர்வில், இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகே புதிய குழுவிற்கு தேசிய முயற்சியின் நோக்கம் மற்றும் தேசிய இலக்குகளை அடைய விவசாயத் துறையுடன் இராணுவம் எவ்வாறு கைகோர்ப்பது என்பது பற்றி விளக்கியமையுடன் எதிர்காலத்தில் உணவு வகைகளுக்கு பற்றாக்குறை ஏற்படாமல் இருக்க, கைவிடப்பட்ட நிலங்களில் உடனடி பயிர்ச் செய்கை மூலம் உணவு உற்பத்தி செயல்முறையைப் பெருக்குவது தொடர்பாகவும் விளக்கினார்.

முதற்கட்டமாக, நாடளாவிய ரீதியில் உள்ள இராணுவத்தினர் விவசாய நிபுணர்கள், விவசாய அதிகாரிகள் மற்றும் இராணுவ விவசாய மற்றும் கால்நடை பணியகத்தின் அனுபவம்வாய்ந்த அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, தெரிவு செய்யப்பட்ட விதை வகைகளைப் பயிரிடுவதற்கு அவசியமான களையெடுத்தல், உழுதல் மற்றும் பாத்திகளைத் தயார் செய்தல் மூலம் அந்த அரச நிலங்களில் தரை மண்ணை தயார் செய்வர்.

அத்தோடு ஏற்கனவே இராணுவத்தால் 16 பண்ணைகள், மற்றும் இலங்கை இராணுவ விவசாய மற்றும் கால்நடைப் படையணியின் 6 பட்டாலியன்கள் நாடு முழுவதும் பராமரிக்கப்பட்டு வருகின்றன.


அத்தோடு, நாடு முழுவதும் உள்ள அனைத்து பாதுகாப்புப் படைத் தலைமையகங்களும் படைப்பிரிவுகளும் தேசத்தின் பாதுகாவலர்களாக, கைவிடப்பட்ட அரச நிலங்கள் மற்றும் நெல் வயல்களைப் பயன்படுத்துவதற்கான திறனைத் தற்போழுது ஆராய்கின்றன.

தெரிவு செய்யப்பட்ட காணிகளில் பூர்வாங்க வேலைகளை ஆரம்பிக்க முன்னர், அந்தந்த ஆளுநர்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள், காணி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராமசேவை உத்தியோகத்தர்கள் ஆகியோரின் நெருக்கமான ஆலோசனையுடன் பிராந்திய மட்டத்தில் அரச காணிகள் அடையாளம் காணப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு




# உக்ரைன் என்ற நாடே உலக வரைபடத்தில் இருக்காது என்கின்றார் ரஷ்ய முன்னாள் அதிபர் டிமிட்ரி மெத்வதேவ்



கிழக்கு உக்ரைனில் தாக்குதல் தீவிரம் அடைந்துள்ள நிலையில், இன்னும் இரண்டு ஆண்டுகளில் உக்ரைன் என்ற நாடே உலக வரைபடத்தில் இருக்காது என்று ரஷ்ய முன்னாள் அதிபர் எச்சரித்துள்ளார். நேட்டோ அமைப்பில் உக்ரைன் சேருவதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்த ரஷ்யா,100 நாள்களுக்கு மேலாக தீவிர தாக்குதலை நடத்தி வருகிறது. கார்க்கிவ், மரியுபோல் உள்ளிட்ட இடங்களில் ஏவுகணைகள், குண்டுகளை வீசி சரமாரியாக தாக்குதல் நடத்தின. இந்த தாக்குதலில் ஏராளமான வீடுகள், பள்ளிகள், மருத்துவமனைகள் மற்றும் வணிக வளாகங்கள் ஆகியவை கடுமையாக சேதம் அடைந்தன.

இந்த நிலையில் உக்ரைன் போர் குறித்து கருத்து தெரிவித்த ரஷ்யாவின் முன்னாள் அதிபரான டிமிட்ரி மெத்வதேவ், ரஷ்ய எதிர்ப்பு திட்டத்தில் அமெரிக்கா, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் அதிக அளவில் முதலீடு செய்கின்றன என தெரிவித்தார். உக்ரைனை வைத்து மேற்கத்திய நாடுகள் ரஷ்யாவிடம் விளையாடி வருகின்றன எனவும் அது விரைவில் முடிவுக்கு வரும் என்றும் முன்னாள் அதிபர் டிமிட்ரி மெத்வதேவ் எச்சரித்துள்ளார். அடுத்த 2 ஆண்டுகளில் உக்ரைன் உலக வரைபடத்தில் இருக்காது என்றும் அவர் தெரிவித்தார். இதனிடையே உக்ரைன் பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வர தயாராக இருக்கிறேன் என சீன அதிபர் ஜிங்பிங் தெரிவித்தார்.

## உக்ரைன் அதிபரைச் சந்தித்தார் இங்கிலாந்து நாட்டுப் பிரதமர்



உக்ரைனுக்கு எதிரான ரஷ்ய படைகளின் தீவிர போரானது 100 நாள்களை கடந்தும் முடிவுக்கு வராமல் நீண்டு கொண்டே செல்கிறது. ரஷ்ய படை வீரர்கள் தொடர்ந்து முன்னேறி வருகின்றனர். இரு நாட்டின் வீரர்களும், பொதுமக்களும் ஆயிரக்கணக்கில் உயிரிழந்து உள்ளனர். இந்தப் போரில் ரஷ்யாவை கட்டுப்படுத்தும் நோக்கில் அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகள் பொருளாதார தடைகளை விதித்து வருகின்றன. உக்ரைனுக்கு அமெரிக்கா உள்பட சில நாடுகள் ஆயுத உதவிகளையும், நிதி உதவியையும் வழங்கி வருகின்றன. போரை நிறுத்தும் முயற்சியின் ஒரு பகுதியாகவும், தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் ரஷ்யாவில் இருந்து பல்வேறு பெரிய நிறுவனங்கள் வெளியேறி வருகின்றன. இதற்கிடையே, இங்கிலாந்து நாட்டின் பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்தியில், தொடர்ந்து வர்த்தகத்தில் ஈடுபடுவோர் மற்றும் பணக்கார பிரமுகர்கள் ரஷ்யாவில் இருந்து வெளியேற கூடிய சூழலால் அந்நாட்டின் பொருளாதாரத்தின் மீது போரால் ஏற்படும் நீண்டகால சேதம் இன்னும் அதிகரிக்கும். ரஷ்யாவில் இருந்து வெளியேறுவதற்கான விண்ணப்பங்களில் இருந்து 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கோடீஸ்வரர்கள் முன்பே அந்நாட்டில் இருந்து கிளம்ப முயற்சித்துள்ளனர் என தெரிய வந்ததாக தெரிவித்து உள்ளது. இந்நிலையில், உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியை இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சன் நேற்று நேரில் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பில், உக்ரைன் போரின் நிலைமை குறித்து இருவரும் விவாதித்தனர். இதுதொடர்பாக பிரதமர் ஜான்சன் வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்தியில், உக்ரைன் ராணுவத்தில் உள்ள ஆயிரக்கணக்கான படை வீரர்களுக்கு பயிற்சி அளிக்கக்கூடிய வகையில் பெரிய அளவிலான பயிற்சியை இங்கிலாந்து வழங்க இருக்கிறது. உக்ரைனுடன் துணை நிற்போம் என்ற ஹேஷ்டேக்கையும் பதிவிட்டுள்ளார்.



## அசாஞ்சேவை நாடு கடத்த பிரிட்டன் உள்துறை முடிவு

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஜூலியன் அசாஞ்சே, தனது விக்கிலீக்ஸ் இணையதள பத்திரிகையின் மூலம் அமெரிக்க ராணுவ ரகசியங்களை வெளியிட்டமை தொடர்பான வழக்குகளில் குற்றம் சுமத்தப்பட்டு 2019 முதல் பெல்மார்ஷ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அதற்கு முன்பு, சுவீடனில் பதிவு செய்யப்பட்ட பாலியல் வழக்கில் இருந்து தப்புவதற்காக, லண்டனில் உள்ள ஈக்வடார் தூதரகத்தில் 7 ஆண்டுகளாக தஞ்சமடைந்து இருந்தார்.

இதற்கிடையே, கடந்த ஏப்ரல் மாதம் காணொலி மூலம் நடந்த இந்த வழக்கு விசாரணையில், அசாஞ்சேவை அமெரிக்காவுக்கு நாடு கடத்த உத்தரவிட்ட நீதிமன்றம், அதற்கான ஒப்புதலைப் பெற பிரிட்டன் உள்துறை அமைச்சர் பிரீத்தி படேலுக்கு ஆவணங்களை அனுப்பி வைக்க உத்தரவிட்டது.

இந்நிலையில், பிரிட்டன் உள்துறை அமைச்சர் நேற்று வெளியிட்ட அறிவிப்பில், 'நீதிமன்ற உத்தரவுபடி அசாஞ்சேவை நாடு கடத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியிட்டுள்ளது,' என்று கூறப்பட்டுள்ளது. இதனை எதிர்த்து அசாஞ்சே மேல்முறையீடு செய்ய வாய்ப்புகள் உள்ளன.

## ஒமிக்ரோன் வைரஸ் நீண்டகால பாதிப்புகளை ஏற்படுத்தாது என ஆய்விலிருந்து தகவல்



கடந்த 2019ம் ஆண்டு இறுதியில் சீனாவில் உருவான கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பரவி தற்போது வரை பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. கொரோனா வைரஸ் மரபணு மாற்றம் அடைந்து உருமாறியது. அல்பா, பீட்டா, காமா, டெல்டா என்று பெயரிடப்பட்டது. இதற்கிடையே கடந்த ஆண்டு நவம்பர் மாதம் புதிய உருமாறிய கொரோனா ஒமிக்ரோன் வைரஸ் கண்டறியப்பட்டது. மற்ற உருமாறிய கொரோனா வைரஸ்களை விட ஒமிக்ரோன் வேகமாக பரவும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்தனர். ஒமிக்ரோன் வைரஸால் பல நாடுகளில் மீண்டும் கொரோனா பாதிப்பு அதிகரித்தது. இந்த நிலையில் மற்ற உருமாறிய கொரோனா வைரஸ்களை விட ஒமிக்ரோன் நீண்டகால பாதிப்பை ஏற்படுத்தும் வாய்ப்பு குறைவு என்று ஆய்வில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. இது தொடர்பாக இங்கிலாந்தைச் சேர்ந்த லண்டன் கிங்ஸ் கல்லூரியில் ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்ட ஆய்வில் கூறியிருப்பதாவது:- இங்கிலாந்தில் டெல்டா வைரஸுடன் ஒப்பிடும்போது ஒமிக்ரோன் வைரஸால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தொற்றுக்கு பிறகு நீண்டகால கொரோனா பாதிப்பு உருவாவதற்கான வாய்ப்பு 20 சதவீதம் முதல் 50 சதவீதம் வரை குறைவாக இருக்கிறது. இது நோயாளியின் வயது மற்றும் கடைசி தடுப்பூசி செலுத்திய நேரத்தை பொறுத்து மாறுபடும். ஒமிக்ரோன் பாதிப்புக்கு பிறகு நீண்டகால அறிகுறிகளின் ஆபத்து டெல்டாவை விட குறைவாக இருக்கிறது. என்றாலும் அது தடுப்பூசியை முழுமையாக செலுத்தியவர்களுக்கு மட்டுமே பொருந்தும் 2021ம் ஆண்டு டிசெம்பர் முதல் 2022ம் ஆண்டு மார்ச் வரை ஒமிக்ரோன் பாதிப்பு உச்சத்தில் இருந்த போது நோய் பாதிப்புக்கு உள்ளான 56,003 பேரில் 4.5 சதவீதம் பேர் நீண்ட கால பாதிப்பை பதிவு செய்து உள்ளனர்.

டெல்டா வைரஸ் அலையின்போது (2021 ஜூன் முதல் நவம்பர் வரை) 41,361 பேரில் 10.8 சதவீதம் பேர் நீண்ட கால கொரோனா அறிகுறிகளுடன் இருந்து உள்ளனர். இதுகுறித்து ஆராய்ச்சியாளர் டாக்டர் கிளாரி ஸ்டீவ்ஸ் கூறும்போது, ஒமிக்ரோன் வைரஸால் நீண்ட கால பாதிப்பு இருக்கும் வாய்ப்பு குறைவு என்றாலும் அதற்கான சிகிச்சைகளை நீக்கி விடக் கூடாது என்றார்.

## சூகியின் நெருங்கிய கூட்டாளிக்கு 21 ஆண்டுகள் சிறைத்தண்டனை



மியன்மார் நாட்டில் ஆட்சியை கடந்த ஆண்டு பெப்ரவரி 1ஆம் திகதி ராணுவம் கைப்பற்றியது. மேலும், அந்நாட்டின் தலைவர் ஆங் சான் சூகி உள்ளிட்ட முக்கிய தலைவர்களை கைது செய்து சிறை வைத்தது. ராணுவத்திற்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபடுதல், ஊழல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளுக்காக ஆங் சாங் சூகிக்கு 10 ஆண்டுகளுக்கு மேல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், ஆங் சாங் சூகியின் நெருங்கிய கூட்டாளிக்கு 21 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து ராணுவ கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது. சூகியின் கூட்டாளியான ஷா மியூட் மவுங் மீது ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. குற்றம் நிரூபிக்கப்பட்டதாகவும் அதற்கு தண்டனையாக 21 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்படுவதாக கோர்ட்டு தெரிவித்துள்ளது. ஆங் சாங் சூகியின் தேசிய ஜனநாயக கட்சியின் செய்தித்தொடர்பாளராக ஷா மியூட் செயல்பட்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# அரசின் அக்னிபாத் திட்டத்துக்கு எதிராக சென்னையில் இளைஞர்கள் போராட்டம்

இந்திய மத்திய அரசின் அக்னிபாத் திட்டத்திற்கு எதிராக இந்தியா முழுவதும் போராட்டம் வலுத்து வருகிறது. தமிழகம், ஆந்திரா, பீகார், உத்தரப் பிரதேசம், அரியானா உள்ளிட்ட மாநிலங்களில் அக்னிபாத் திட்டத்திற்கு எதிராக இளைஞர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். பீகார், உத்தரப் பிரதேசம் ஆகிய மாவட்டங்களில் ரயில்கள் எரிக்கப்பட்டு போராட்டம் வன்முறையாக மாறியது.

தமிழகத்தில் கடந்த இரண்டு நாள்களுக்கு முன்பு நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் அருகே போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து, அக்னிபாத் இராணுவ ஆள்சேர்ப்பு திட்டத்துக்கு எதிராக சென்னை தலைமைச் செயலகத்தின் அருகேயும் இளைஞர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இராணுவத்தில் சேருவதற்காக விண்ணப்பித்திருக்கும் ஆரணி, கோவை, திருவண்ணாமலை உள்ளிட்ட இடங்களில் இருந்து வந்துள்ள இளைஞர்கள், சென்னையில் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

# இந்திய மத்திய அரசுக்குத் தக்க வகையில் பாடம் தயாராக வேண்டுமென சித்தராமையா அழைப்பு



அக்னிபாத் திட்டத்தால் இளைஞர்களின் வாழ்க்கையில் விளையாடும் மத்திய பா.ஜனதா அரசுக்கு பொதுமக்கள் தக்க பாடம் புகட்டத் தயாராக வேண்டும் என்று கர்நாடக சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் சித்தராமையா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சித்தராமையா தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், மத்திய அரசு இராணுவ ஆள்சேர்ப்புக்கு அக்னிபாத் திட்டத்தை அறிவித்துள்ளது. நாட்டின் இளைஞர்களை வேலையில்லாத் திண்டாட்டத்தில் தள்ளுவதும், நாட்டின் பாதுகாப்புக்கு அபாயகரமானதுமான இந்தத் திட்டத்தை உடனடியாக ரத்துச் செய்ய வேண்டும். தற்போது நடைமுறையில் உள்ள விதிகளின்படியே இராணுவத்திற்கு ஆள்சேர்க்க வேண்டும்.

ஆண்டுக்கு 2 கோடி வேலைவாய்ப்புகளை உருவாக்குவதாக பிரதமர் மோடி உறுதியளித்தார். ஆனால், வேலைவாய்ப்பு வழங்கும் துறைகளின் கதவுகளை ஒவ்வொன்றாக அவர் மூடி வருகிறார். ஆண்டுக்கு 2 கோடிப் பேருக்கு வேலை இல்லாத நிலையை உருவாக்கும் திட்டம் ஏதேனும் அவரிடம் உள்ளதா? பணிப் பாதுகாப்பு இல்லாமை, எதிர்காலம் குறித்த பயம், பணியின் மீது பற்று இல்லாத நிலையை உருவாக்கும் வகையில் இருக்கும் இந்த அக்னிபாத் திட்டத்தில் சேரும் வீரர்கள் தங்களின் தொழிலை முழுமையான காலத்திற்கு மேற்கொள்ள முடியுமா? எதிரிகளுடன் போராடும் வீரர்களின் இந்த மனநிலை அபாயகரமானது அல்லவா?

நாட்டிற்காக உயிரைத் தியாகம் செய்யும் வீரர்களுக்கு பணிப் பாதுகாப்பு, நியாயமான சம்பளம், ஓய்வூதியம் போன்றவற்றை வழங்க முடியாத அளவுக்கு மத்திய அரசு திவாலாகிவிட்டதா? மத்திய அரசு தனது திவால் நிலையை மூடிமறைக்க நாட்டின் பாதுகாப்புடன் விளையாடுவது சரியல்ல. இராணுவ வீரர்களின் வாழ்க்கையைப் பறிக்கும் இந்த தேசத்துரோக பா.ஜனதா அரசு, வரும் நாள்களில் இதர துறைகளிலும் இதே நடைமுறையை அறிமுகம் செய்வது உறுதி.

பொதுமக்கள் விழித்துக்கொள்ள வேண்டிய தருணம் வந்துவிட்டது. விவசாயிகளின் வாழ்க்கையை நாசப்படுத்த கறுப்பு வேளாண் சட்டங்களைக் கொண்டு வந்தனர். அதனால், மத்திய அரசுக்கு விவசாயிகள் பாடம் புகட்டினர். தற்போது இளைஞர்களின் வாழ்க்கையை நாசப்படுத்துவதுடன் அவர்களின் வாழ்க்கையில் விளையாடும் மத்திய பா.ஜனதா அரசுக்குப் பாடம் புகட்ட பொதுமக்கள் தயாராக வேண்டும், என்று குறிப்பிட்டுள்ளார்.



# தாயாரின் நூறாவது பிறந்தநாள் நேரில் வாழ்த்துப் பெற்ற பிரதமர்

குஜராத் மாநிலத்தில் இரண்டு நாள் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ள இந்தியப் பிரதமர் மோடி, வதோதராவில் 21 ஆயிரம் கோடி ரூபா மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை ஆரம்பித்து வைத்துள்ளார்.


16 ஆயிரம் கோடி மதிப்பீட்டில் பல்வேறு ரயில் மேம்பாட்டுத் திட்டங்களை நாட்டிற்கு அர்ப்பணித்த அவர், வீட்டுவசதித் திட்டத்தின் கீழாக 1.38 லட்சம் வீடுகளையும் மக்களுக்கு வழங்கியுள்ளார். பவகத் மலையில் புதுப்பிக்கப்பட்ட ஸ்ரீ காளிகா மாதா கோவிலையும் இன்று பிரதமர் மோடி திறந்து வைத்தார்.

இதனிடையே பிரதமர் மோடியின் தாயாரான ஹீரா பென்னின் 100 ஆவது பிறந்தநாளையொட்டி, காந்தி நகரில் உள்ள அவரது இல்லத்தில் நேரில் சென்று பிரதமர் மோடி வாழ்த்துப் பெற்றார்.

# வியட்நாம் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரை நேற்று சந்தித்தார்

இந்தியா, வியட்நாம் நாடுகளுக்கு இடையே தூதரக ரீதியிலான உறவு தொடங்கப்பட்டு 50 ஆண்டுகளை எட்டியுள்ளது. இதனையொட்டி, வியட்நாம் வெளியுறவுத்துறை அமைச்சர் புய் தங் சன் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

அவர் இந்திய வெளியுறவுத் துறையமைச்சர் ஜெய்சங்கரை தலைநகர் டெல்லியில் நேற்றுச் சந்தித்தார். இந்தச் சந்திப்பின்போது இரு நாட்டு உறவை வலுப்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது. இரு நாட்டு வெளியுறவுத்துறை அதிகாரிகள் மட்டத்திலான பேச்சும் இதன்போது நடைபெற்றது.






# ஜனாதிபதித் தேர்தல் பொதுவேட்பாளர்; எதிர்க்கட்சிகள் மீண்டும் ஆலோசனை

இந்தியாவின் 15 ஆவது ஜனாதிபதியாக ராம்நாத் கோவிந்த் கடந்த 2017 ஆம் ஆண்டு பதவியேற்றார். அவரது பதவிக்காலம் ஜுலை 24ஆம் திகதி முடிவடைகிறது. இதனால், அடுத்த ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் ஜுலை 18 ஆம் திகதி நடைபெறும் என இந்திய தலைமைத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இதையடுத்து, ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பாக எதிர்க்கட்சிகளுடன் டெல்லியில் நேற்று முன்தினம் மேற்கு வங்காள முதலமைச்சர் மம்தா பானர்ஜி ஆலோசனை நடத்தினார். எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக சரத்பவாரை அனைவரும் முன்மொழிந்த நிலையில், உடல்நிலை சரியில்லாததால் தன்னால் அந்தத் தேர்தலில் நிற்க முடியாது என சரத்பவார் மறுத்துவிட்டார்.

இதனையடுத்து, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக எதிர்க்கட்சிகள் ஜுன் 21 ஆம் திகதி மீண்டும் ஆலோசனை நடத்த முடிவு செய்துள்ளன. இந்தக்கூட்டத்திலும் எதிர்க்கட்சிகள் சார்பில் பொது வேட்பாளரை தெரிவு செய்வது குறித்து கலந்துரையாடவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# மட்டக்களப்பில் சிறுபோக அறுவடையில் ஒரு பகுதி மாவட்ட மக்களின் பாவனைக்கு

## குடும்பத்திற்கு இரண்டு மூடை நெல் ஒதுக்கத் திட்டம்



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை செய்கை பண்ணப்பட்ட சிறுபோக நெல் அறுவடையின் ஒருபகுதியை இம்மாவட்ட மக்களின் பாவனைக்கு முழுமையாகப் பயன்படுத்த மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக உணவுத்தட்டுப்பாடு நிலை பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பின்புலத்தில் இம் மாவட்டத்தில் செய்கைபண்ணப்பட்டுள்ள சிறுபோக நெற்செய்கை அறுவடையைப் பொதுமக்கள் முழுமையாகப் பயன்படுத்துவதற்கான திட்டம் மாவட்ட மட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக மாவட்ட மக்கள் எதிர்வரும் ஆறு மாதகாலத்திற்கு தமக்குத் தேவையான உணவு தானியங்களைச் சேமித்துக் கொள்வதற்காக குறைந்தபட்சம் ஒருகுடும்பத்திற்கு இரண்டு மூடை நெல்லை கொள்வனவு செய்து வைத்துக் கொள்வதற்கான ஆலோசனைகளையும், ஊக்குவிப்புகளையும் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அடுத்துவரும் ஆறுமாத காலத்திற்கு மாவட்ட மக்களை உணவுப் பற்றாக்குறையிலிருந்து காத்துக் கொள்வது தொடர்பாக ஆலோசிக்கும் விசேட கூட்டம் அரசாங்க அதிபர் கே. கருணாகரன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போதே இத்தீர்மானம் உயர்சபையினால் மேற்கொள்ளப்பட்டது.

இதற்கமைவாக இம்மாவட்டத்தில் நெல் அதிகளவில் உற்பத்தி செய்யப்படும் பிரதேசசெயலகப் பிரிவுகளிலிருந்து நெல்லைக் கொள்வனவு செய்து பொதுமக்களுக்கு நேரடியாக வழங்க எதிர்பார்க்கப்படுகின்றது.

கிராம அபிவிருத்தி திணைக்கள மாகாணப் பணிப்பாளர் தனஞ்ஜயனின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற இக்கூட்டத்தில், வறிய குடும்பங்கள் தமக்குத் தேவையான நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு வேண்டிய நிதியைகிராம அபிவிருத்தி சங்கங்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்கள அமைப்புகளினூடாக வட்டியற்ற கடனடிப்படையில் வழங்குவதற்குத் தேவையான ஆலோசனைகளும் அரசாங்க அதிபரினால் இதன்போது வழங்கப்பட்டன.

இதுதவிர இம்மாவட்ட மக்கள் அனைவரும் தமக்குத் தேவையான உணவுகளை பெற்றுக் கொள்வதற்காகக் குடும்பத்திற்கு குறைந்தபட்சம் இரண்டு மூடை நெல்லினை கொள்வனவு செய்துகொள்வதனூடாக உணவுத் தட்டுப்பாட்டிலிருந்து தவிர்ந்து கொள்ளமுடியும் எனவும், அதிக விலையேற்றம், பதுக்கல் மாபியாக்களிடமிருந்து மக்களைப் பாதுகாக்க முடியும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் பொதுமக்கள் வீடுகளில் தமக்குத் தேவையான காய்கறி, பழமரக்கன்றுகளைக் கொண்ட வீட்டுத்தோட்டத்தினை செய்துகொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டு வருகின்றனர்.

இவ்விசேட கூட்டத்தின்போது மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந்த், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சசிகலா புண்ணியமூர்த்தி, சமுர்த்தி அபிவிருத்தி திணைக்கள மாவட்ட பணிப்பாளர் எஸ். புவனேந்திரன், ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் கே. தனபாலசுந்தரம், மண்முனை வடக்கு உதவிப்பிரதேச செயலாளர் திருமதி. எல். பிரசாந்தன், மண்முனை மேற்கு உதவிப் பிரதேச செயலாளர் சுபா சதாகரன், மாவட்ட தகவல் அதிகாரி வீ. ஜீவானந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# நியூசிலாந்து தூதுவர் திருமலைக்கு விஜயம்

இலங்கைக்கான நியூசிலாந்து உயர்ஸ்தானிகர் மைக்கேல் எட்வர்ட் அப்பிள்டன் திருகோணமலைக்கு விஜயம் செய்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் தயாரிக்கப்பட்ட புதிய முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பான விசேட அறிக்கையை அவரிடம் கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் நேற்று முன்தினம் காலை முதன்முறையாக சமர்ப்பித்தார்.

இதன் மூலம் மாகாணத்தில் முதலீட்டு வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கு உதவுமாறு கிழக்கு மாகாண ஆளுநர் நியூசிலாந்து உயர்ஸ்தானிகரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆளுநரின் ஆலோசனைக்கமைய கிழக்குமாகாணத்தில் செயற்படுத்தப்பட்டு வரும் 'நிலைபேறான பால் பண்ணை திட்டம்' நியூசிலாந்து உயர்ஸ்தானிகரினால் பாராட்டப்பட்டது. அது தொடர்பில் அவசியமான உதவிகளைவழங்குவதாக, உயர் ஸ்தானிகர் இதன்போது ஆளுநரிடம் உறுதியளித்தார்.

இரண்டு நாள்களாக திருமலை பிரதேசத்திற்கு விஜயம் செய்து, திருமலை மாவட்ட அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு தொடர்பான பல்வேறு விடயங்களையும் தூதுவர் ஆராய்ந்தார்.

திருகோணமலை மாவட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் சிலரையும் நியூசிலாந்து நாட்டின் துதுவர் மைக்கல் அப்பிள்டன் திருகோணமலை நட்சத்திர விடுதி ஒன்றில் சந்தித்தார்.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் மற்றும் தற்போது ஏற்பட்டிருக்கின்ற அசாதாரண சூழ்நிலையை எவ்வாறு ஊடகவியலாளர்கள் எதிர்கொள்கின்றார்கள் என பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் நியூசிலாந்து தூதரகம் மேற்கொள்ளவுள்ள திட்டங்கள் தொடர்பாகவும், இதன்போது உயர்ஸ்தானிகர் ஊடகவியலாளருக்கு விளக்கமளித்தார்.

கிழக்கு மாகாணத்தில் விவசாயம் மற்றும் கால்நடை பண்ணைகளுக்கு பல்வேறு உதவிகளை நியூசிலாந்து அரசாங்கத்திடமிருந்து பெற்று வழங்குவதற்குத் தாம் முயற்சி செய்வேன் எனவும் இச்சந்திப்பின்போது தூதுவர் தெரிவித்தார்.

இலங்கையில் நியூசிலாந்து தூதரகம் ஸ்தாபிக்கப்பட்டு சுமார் ஒரு வருடம் கடந்துள்ளதோடு, அதன் மூலம் இலங்கைக்கு வந்துள்ள முதலாவது நியூசிலாந்து உயர் ஸ்தானிகராக மைக்கேல் அப்பிள்டன் விளங்குகிறார்.

# கல்முனையில் சுகாதாரத்திற்கும் சுற்றாடலுக்கும் அச்சுறுத்தல் விடுப்போர் மீது நடவடிக்கை பாயும்

## பிரதம சுகாதார வைத்தியதிகாரி அர்சத் காரியப்பர் உறுதி

(நூருல் ஹுதா உமர்)



கல்முனைப் பிரதேசத்தில் முறைகேடாக விலங்குக் கழிவுகளை அகற்றுவோரை கண்காணிக்கவும் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் கல்முனை மாநகர சபை தயாராக இருக்கிறது. இவ்வாறான முறைகேடான கழிவகற்றல் நாசகார செயலை செய்யும் இறைச்சி கடைக்காரர்களின் சுற்றாடல் பாதுகாப்பு உத்தரவுப்பத்திரம், வர்த்தக அனுமதிப்பத்திரம் ஆகியவற்றை ரத்து செய்யவும், அப்படிப்பட்டவர்களுக்கு இனி வரும் காலங்களில் அனுமதிப்பத்திரங்களை வழங்காமல் இருக்கவும் தீர்மானித்துள்ளோம் என கல்முனை மாநகர பிரதம சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் எம்.ஜே.கே.எம். அர்சத் காரியப்பர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக பல்வேறு சர்ச்சைகளை சந்தித்துவரும் கல்முனை பிராந்திய சுகாதாரத்துறை சீர்கேடுகள் தொடர்பில் கல்முனை மாநகர சபை எடுக்கவுள்ள நடவடிக்கை தொடர்பில் ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கல்முனை மாநகரத்திலுள்ள நீரோடைகள், பொது இடங்கள், வயல்வெளிகள், வீதி ஓரங்களில் விலங்கு கழிவுகள், திண்மக் கழிவுகள் கொட்டப்பட்டு வருவதையும் அதனால் பல்வேறு சுகாதார சீர்கேடுகள் ஏற்பட்டு வருகின்றமையையும் தொடர்ந்தும் அவதானித்து வருகிறோம். இது தொடர்பில் முக்கியசிவில் அமைப்புக்கள் பலவும் முறைப்பாடுகளைச் செய்து வருகின்றன.

பல்வேறு சந்தர்ப்பங்களில் கல்முனை மாநகர சபை முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றக்கீபும் இது தொடர்பில் பல்வேறு அறிவித்தல்களை விடுத்திருந்தார். அவற்றையெல்லாம் கவனத்தில் கொள்ளாது பொதுமக்களின் சுகாதார மற்றும் சுற்றாடலுக்கு சவால் விடுக்கும் வேலைகளை சில நாசகாரர்கள் செய்துவருகிறார்கள். கல்முனை மாநகர சபையின் வளங்களை பயன்படுத்தி முடியுமான வரை திண்மக் கழிவகற்றலை செய்துவருகிறோம்.

அப்படியிருந்தும் மனிதாபிமானமில்லாது, இறைவன் பார்த்துக்கொண்டிருக்கிறான் என்ற அச்ச உணர்வின்றி, சிலர் செய்யும் செயலினால் ஏனைய பொதுமக்களும் தர்ம சங்கடத்துக்கு உள்ளாகுகிறார்கள்.

நீரோடைகள், கரைவாகு வயற்காணி, வளஞ்சாவட்டை வயற்காணி போன்றவற்றின் பிரதான வடிச்சல் நீரோடையாகவும் அதேபோன்று காரைதீவு, மாளிகைக்காடு, சாய்ந்தமருது, கல்முனை, நற்பிட்டிமுனை போன்ற பிரதேசங்களின் மழைநீர் வடிந்தோடும் வடிகாலாகவும் இருப்பதால் இந்த நீரோடையில் இயற்கைக்கு முரணாக கழிவுகளை வீசி அசுத்தப்படுத்த வேண்டாம் என பொதுமக்களைக் கேட்டுக் கொள்கிறோம். அவ்வாறு கழிவுகளை வீசுபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க தயாராகவும் உள்ளோம் எனத் தெரிவித்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# தமிழ் இனத்தின் எதிர்காலத்தை வகுப்பதற்கான தருணம் இதுவே!

## சிவசக்தி சுட்டிக்காட்டு



தென்னிலங்கை அரசாங்கம் பாரிய பொருளாதார, அரசியல் நெருக்கடிகளுக்கு உள்ளாகியிருக்கும் இந்தச் சூழலை தமிழ் மக்களின் விடிவுக்காகப் பயன்படுத்துவதற்கு அனைத்துத் தமிழ்த் தலைமைகளும் தலைப்பட வேண்டியது தவிர்க்க முடியாத விடயமென ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

ஜுன்-19, 32 ஆவது, தியாகிகள் தினத்தை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

விடுதலைக்காகத் தமது இன்னுயிர்களை ஈகம் செய்த அத்தனை தியாகிகளுக்கும், ஏனைய அமைப்புக்களைச் சேர்ந்த போராளிகள் பொதுமக்களுக்கும் நெஞ்சார்ந்த அஞ்சலிகளைச் செலுத்துகின்றோம், தற்போதை நிலையிலாவது அவர்களின் கனவுகளை நனவுகளாக்குவதற்கு முயற்சிகளை எடுக்க வேண்டித் தலைப்பட்டிருக்கின்றோம்.

இலங்கை பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவித்துக்கொண்டிருக்கின்றது. இதனால் அரசியல் நெருக்கடிகளும் ஏற்பட்டுவிட்டன. சர்வதேச நாணய நிதியத்தின் உதவி மற்றும் இதர நாடுகளின் நன்கொடைகளைப் பெற்றுக்கொண்டாலும் தற்போதைய பொருளாதார நெருக்கடி முற்றுமுழுதாகச் சீரடையும் என்று கூறுவதற்கு இல்லை.

கடன்களுக்கு மேல் கடன்களைப் பெற்றுக்கொள்ளும் முறையால் நாடு இன்னமும் மோசமான நிலைமைக்குள்ளேயே தள்ளப்படும் பேராபத்து இருக்கின்றது. இவ்வாறான தருணத்தில், பொருளாதார, அரசியல் நெருக்கடியில் இருக்கின்ற நிலையில் தமிழினத்தின் எதிர்காலம் சம்பந்தமாக, கோரிக்கைகள் சம்பந்தமாக எவ்விதமான நகர்வுகளையும் முன்னகர்த்துவது பொருத்தமற்றது என்றதொரு தோற்றப்பாடு கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

இது தவறானதொரு நிலைப்பாடாகும். இதற்குக் கடந்தகால அனுபவங்கள் பல உள்ளன. குறிப்பாகக் கூறுவதானால், போர் நிறைவுக்கு வந்தவுடன் இனப்பிரச்சினைக்கான தீர்வு வழங்கப்படும் என்று ராஜபக்ஷக்கள் கூறினார்கள். பின்னர் போர் முள்ளிவாய்க்கால் பேரவலத்துடன் நிறைவுக்கு வந்தபோது, அவர்கள் போர் வெற்றிவாதத்தில் மிதந்தார்கள்.

இடிபாடுகளுக்குள் நல்லிணக்கம் பற்றி பேச முடியாது என்றார்கள். அபிவிருத்திகள் மேற்கொள்ளாது இனங்களுக்கு இடையில் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்றார்கள். இவ்வாறு கூறி தற்போது 13 ஆண்டுகள் நிறைவுக்கு வந்துவிட்டன.

இவ்வாறான நிலையில் தற்போது தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான சூழல் சுமுகமாகும் வரையில் தமிழ்த் தரப்பு அமைதியாக இருக்க வேண்டும் என்று கூறுகின்றமை பொருத்தமற்றதாகும். தற்போதைய சூழலைத் தமிழ்த் தரப்பு கையாள வேண்டும். முதலில் தற்போதைய நெருக்கடிகளின் மூலவேர் இனப்பிரச்சினை தான் என்பதை உறுதியாக வெளிப்படுத்த வேண்டும். அதனை தென்னிலங்கைச் சக்திகளையும் ஏற்றுக்கொள்ளச் செய்ய வேண்டும். அதற்குரிய மூலோபாய அணுகுமுறைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அத்துடன், தற்போது இலங்கைக்குத் தேவையான அத்தியாவசியமான பொருள்களை வழங்கும் வெளிநாடுகளில் இந்தியா முதன்மையானதாக உள்ளது. ஏற்கனவே தமிழர்கள் சார்பில் இந்தியா இலங்கையுடன் ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது.

அந்த வகையில் தற்போது நெருக்கடியான காலத்தில் இந்திய மத்திய அரசிடம், ஈழத் தமிழர்களின் விவகாரத்தைக் கையாள்வதற்காக அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டுவதற்கான உந்துதலைத் தமிழ்த் தரப்புக்கள் கூட்டாக கோரிக்கை முன்வைக்க வேண்டும்.

இந்த விடயத்தைத் தமிழ்த் தரப்பு தந்திரோபாய ரீதியாக முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும். உதவிகளை நிபந்தனைகளின் அடிப்படையில் வழங்குதல் என்ற தோற்றப்பாட்டுக்கு அப்பால் விடயத்தைக் கையாள வேண்டும். இதற்கான தமிழ்த் தரப்புக்கள் ஒன்றிணைந்து உரிய செயற்றிட்டமொன்றைத் தயாரிக்க வேண்டியுள்ளது.

ஆனால், தமிழ்த் தரப்புக்கள் தற்போதைய நிலைமைகளைக்கையாள்வதற்குத்தமக்குள்காணப்படுகின்ற தனிநபர் மற்றும் கட்சி அரசியல்களை கைவிட வேண்டியது அவசியமாகின்றது. அவ்விதமாக எந்தவொரு தரப்பினரும் முன்வருவதற்கு தயாரில்லாத சூழலில் தற்போதைய சூழ்நிலையில் தமிழ்த் தரப்பின் வகிபாகம் அற்றுப்போயுள்ளது.

வெறுமனே தென்னிலங்கை அரசியல் விடயங்களைக் கையாள முடியாது. பார்வையாளர்களாக இருக்கும் நிலைமையும், இனப்பிரச்சினை தீர்வு, பொறுப்புக்கூறல் உள்ளிட்ட விடயங்கள் உறை நிலைக்குச் சென்றுள்ள சூழலும் ஏற்பட்டுள்ளது.

ஆகவே, தற்போதையசூழலைக்கையாள்வதற்குத் தமிழ்த் தலைமைகள் ஒன்றிணைந்து தீர்மானிக்க வேண்டும். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயம். கடந்த காலத்தில் எத்தனையோ சந்தர்ப்பங்கள் கைநழுவிச் சென்றிருக்கின்றன.

இந்நிலையில், தற்போதைய சந்தர்ப்பத்தை முறையாக பயன்படுத்துவதற்கு அனைவரும் முன்வர வேண்டும்.

தோழர் பத்மநாபா, கட்சிகளுக்கிடையில் ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவதற்காக ஈழத் தேசிய விடுதலை முன்னணி மற்றும் திம்பு பேச்சிலிருந்து வடக்கு கிழக்கு இணைந்த மாகாண அரசு உருவாக்கம் வரை அனைத்து சந்தர்ப்பங்களையும் பயன்படுத்துவதை தவிர்க்க கூடாது என்பதில் உறுதியாக இருந்தார்.

அத்துடன் தீர்க்க தரிசனமாகவும் பன்முக ஆளுமை கொண்டவராகவும் திகழ்ந்தார். குறிப்பாக, இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் மாகாண சபை முறைமையிலிருந்து அடுத்த கட்டம் நோக்கிச் செல்வதற்கான செயற்றிட்ட வரைவை கைவசம் வைத்திருந்தார்.

ஆனால், அதற்கான சந்தர்ப்பத்தை பல புறச்சக்திகள் அழித்துவிட்டன. அந்தத் தீர்க்க தரிசியின் சிந்தனையை ஏற்றுக்கொள்வதற்கு அந்தச் சக்திகள் மறுத்துவிட்டன அதன் பின்னர் ஏற்பட்ட உயிரிழப்புக்கள்,சொத்தழிவுகள் எண்ணிப் பார்க்க முடியாதவை. இனிவரும் காலத்திலாவது அவ்விதமான தவறைச் செய்யாது சந்தர்ப்பத்தை முறையாகப் பயன்படுத்த வேண்டும்.

அந்த தோழனின் தீர்க்க தரிசனக் கருத்துக்கள் தற்போதைய காலத்திற்கும் பொருத்தமானவை தான். அதனை நெஞ்சில் ஏற்றி தமிழர்களின் எதிர்காலத்தைக் கட்டியமைப்பதற்காக பொது வேலைத்திட்டத்தின் கீழ் ஒரு கட்டமைப்பாக செயற்படுவதற்கு அனைவரும் கைகோர்ப்பதற்கு முன்வரவேண்டும். இதயசுத்தியான அந்த முயற்சிக்கு எமது கட்சி என்றுமே ஆதரவளிப்பதற்குத் தயாராகவே உள்ளது. - என்றுள்ளது.

# ‘கற்பின் கானம்’ பாடல்கள் மட்டக்களப்பில் வெளியீடு





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு செட்டிபாளையம் ஸ்ரீ கண்ணகை அம்மன் புகழ் பாடும் ‘கற்பின் கானம்’ எட்டுப்பாடல்கள் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை செட்டிபாளையம் ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய முன்றிலில் வைபவ ரீதியாக நடைபெற்றது.

இசை இளவரசர் அருணாகேதீசின் இசையமைப்பில் மட்டக்களப்பு கலைஞர்களின் பங்கேற்புடன் உருவாகியுள்ள இந்தப் பாடல்கள் வெளியீட்டு நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன், மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் வ. கனகசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர்.

ஆலய பரிபாலன சபையின் தலைவர் கீ.லோகராஜா தலைமையில் இடம்பெற்ற வெளியீட்டு விழாவிற்கு மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலாளர் திருமதி. சிவப்பிரியா வில்வரெட்ணம், கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் இசைத்துறை தலைவி கலாநிதி நிர்மலேஸ்வரன் பிரசாந்த் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

பாடலாசிரியர்களிற்கு அதிதிகளினால் பொன்னாடை போர்த்தி கௌரவமளிக்கப்பட்டு, இறுவட்டு வெளியிடப்பட்டது. மட்டக்களப்பைச் சேர்ந்த கலைஞர்களான கவிஞர் ஜீ.எழில்வண்ணன், கவிஞர் க.தருமரெத்தினம், கவிஞர் மா.திருநாவுக்கரசு, வேதநாயகி குணநாதன், கவிஞர் அ.கிருபானந்தம், கவிஞர் க.மோகனதாசன், மகாலிங்கம் தயாபரன், கந்தப்பு ஜெயரூபன், சந்திரசோதி பானு, கில்மிஷா உதயசீலன் மற்றும் நாதகானமணி கே.என்.மதுசூதனன் ஆகியோரின் கூட்டு முயற்சியால் இந்த இறுவட்டு பூரணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.06.2022இல் வெளியிடப்பெற்றது.